# விடுமுறையில குடும்பத்தோடு சமூக சேவை

யோகேஸ்வரி 11.6.2007

விடுமுறை நாட்களில் வழக்கமாகக் குடும்பத்தோடு உல்லாசச் சுற்றுலா செல்வதற்குப் பதில் பத்து நாட்களுக்கு பெங்களூர் சென்று சமூக சேவையில் ஈடுபட்டனர் திரு விஜயன் குடும்பத்தினர்.

மே 17- ம் தேதியிலிருந்து 27- ம் தேதி வரை இரண்டு ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் தங்கி சுமார் 120 குழந்தைகளுக்கு அவர்கள் சேவையாற்றினர்.

சிங்கப்பூரிலிருந்து கொண்டே நிதியுதவி வழங்குவோர் பலர் இருக்கின்றனர். ஆனால் நேரடியாகச் சென்று உதவிக்கரம் நீட்டிய இவர்கள் பாராட்டுக்குரியவர்கள். ஆதரவற்ற குழந்தைகளை விஜயன் குடும்பத்தினர் 'ஸ்பைடர் மேன் 3' திரைப்படத்திற்கும் அழைத்துச் சென்றனர்.

"இந்தக் குழந்தைகள் திரையரங்கில் திரைப்படம் காண்பது இதுவே முதல் முறை" என்று திரு விஜயன் தமிழ் முரசிடம் தெரிவித்தார்.

கடைத் தொகுதியில் இருந்த மின்படிகளும் இக்குழந்தைகளுக்கு முதல் அனுபவமாக அமைந்தன.

திரு விஜயனின் குடும்பத்தாரும், சில இந்தியத் தொண்டூழியர்களும் குழந்தைகளை மின்படிகள் மீது தூக்கி வைத்து உதவினர். திரைப்படத்திற்கு மட்டுமல்லாமல் இக்குழந்தைகளை கேளிக்கை பூங்காவிற்கும் அவர்கள் அழைத்துச் சென்று மகிழ்ந்தனர். அனைத்துக் குழந்தைகளையும் சமாளிப்பது கடினமாக இருப்பினும் அவர்கள் மகிழ்ச்சியடைய தாங்கள் ஒரு காரணமாக இருந்ததில் திரு விஜயன் குடும்பத்தினருக்கும் மகிழ்ச்சி. அத்துடன் சுவையான சிற்றுண்டிகளும் உணவும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. ஆதரவற்ற குழந்தைகளில் பெரும்பாலானோர் ஒரு வேளை நல்ல உணவுக்குக் கூட வசதி அற்றவர்கள்.



ஆதரவற்ற குழந்தைகளை 'ஸ்பைடர்மேன் 3' திரைப்படத்திற்கு அழைத்துச் சென்ற திரு விஜயனின் குடும்பத்தினரில் சிலரும் பெங்களூரில் அவர்களுக்கு உதவி செய்த தொண்டூழியர்களும்

எல்லாக் குழந்தைகளையும் போல அவர்களுக்கும் படம், விளையாட்டு மற்றும் இதர நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆசை இருக்கும். அதை இயன்ற அளவு நிறைவேற்றினோம். சிறு வயது அனுபவங்களில் ஒரு சிறு பகுதியை தந்த திருப்தியும் ஏற்பட்டது என்று தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்ட திரு விஜயன் சொன்னார்.

அன்பும் அரவணைப்பும் இல்லாமல் வளர்ந்து வரும் இக்குழந்தைகளிடம் அன்பை வெளிக்காட்டுவதே திரு விஜயன் குடும்பத்தின் நோக்கம்.

வாய்ப்புக் கிடைக்கும் பொழுது, நம்மால் இயன்ற அளவுக்கு குடும்பத்தோடு இது போன்று சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்பது திரு விஜயனின் வேண்டுகோளாகும்.

( திரு விஜயன் குடும்பத்தின் வித்தியாசமான சமூக சேவை மேலும் விவரங்கள் பக்கம் 2ல்

8 887332 357062